JUDICIAL FORM NO.53

( See Rule 42)
Deposition of Witness
(Chapter XXXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, PERUNDURAI

**DVC. 3/2020**

**Both present.**

Solemnly affirmed in accordance with the provisions of the oaths Act, 1969, (Central Act 44 of 1969 ) the day of 28.07.2026.

**P.W. 2 Name:** செல்லப்பன் **S/o.** செல்லப்பகவுண்டர்

<u>**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**</u>

**1.** என்னுடைய மகளுக்காக அவர் தாக்கல் செய்த மனுவில் நான் சாட்சியளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனக்கு இரண்டு மகள்கள் மகன் இல்லை என்றால் சரிதான். மூத்த மகள் பெயர் சத்யா இரண்டாவது மகள் பெயர் திவ்யா என்றால் சரிதான். நாங்கள் அனைவரும் கொங்கு வேளாளர் கவுண்டர் சமூகத்தை சேர்ந்தவர்கள் என்றால் சரிதான். மூத்த மகள் சத்யா காதல் திருமணம் செய்து கொண்டார் என்றால் சரிதான். மூத்த மகள் சத்யா நந்தா கல்லூரியில் வேலை செய்து வந்தார் என்றால் சரிதான். மூத்த மகள் சத்யா BE Computer science படித்துள்ளார். மூத்த மகள் சத்யா தற்போது ஐடி கம்பெனியில் பணிபுரிந்து வருகிறார் என்றால் சரிதான் வீட்டிலிருந்து பணிபுரிந்து வருகிறார். என்னுடைய இளைய மகள் திவ்யா BE Computer science படித்துள்ளார். மூத்த மகளின் கணவர் விவசாயம் செய்து வருகிறார் என்றால் சரிதான். மூத்த மகள் எவ்வளவு சம்பாதிப்பார் என்றால் தோராயமாக சுமார் 60,000 சம்பாதிப்பார்.

2. நான் எட்டாவது வரை படித்துள்ளேன் எழுத படிக்க தெரியும். நான் தாக்கல் செய்துள்ள பிரமாண பத்திரத்தில் உள்ள சங்கதிகள் வழக்கறிஞர் அலுவலகத்திற்கு சென்றேன் அங்கு சாட்சியாக வேண்டும் என்றதால் கையெழுத்து செய்தேன் என்றால் சரிதான். என்ன பரிகாரம் கேட்டு என் மகள் வழக்கு தாக்கல் செய்து உள்ளார் என்று எனக்கு தெரியுமா என்றால் ஜீவனாம்சம் கேட்டும் விவாகரத்து கேட்டும் வழக்கு தாக்கல்

செய்துள்ளார். என்னுடைய பூர்வீகம் கருமாண்டி செல்லிபாளையம் ஆகும். என்னுடன் பிறந்தவர்கள் மொத்தம் ஏழு பேர் ஆவார்கள். ஆண் வாரிசு 3 பேர் பெண் வாரிசு 4 பேர் மொத்தம் ஏழு பேர். என் அப்பா பெயர் செல்லப்பா கவுண்டர் என்றால் சரிதான். என்னுடைய தோட்டத்தின் பெயர் அய்யன் காடு என்று சொல்வார்கள் என்றால் சரிதான். மேற்படி பூமியை என்னுடைய பங்காளிகளும் நானும் சேர்ந்து சைட் போட்டு விற்பனை செய்து வந்தோம் என்றால் சரிதான் தற்போது பிரச்சனை உள்ளது.

3. என்னுடைய பாகத்துக்கு 5 சைட் பாத்தியப்பட்டது. ஒரு சைட்டில் நான் குடியிருந்து வரும் வீடு உள்ளது என்றால் சரிதான். நான் குடியிருந்து வரும் வீடு இரண்டு தளங்களைக் கொண்டது என்றால் சரிதான். மேல் தளத்தில் நான் குடியிருந்து வருகிறேன் கீழ்த்தளத்தை வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான். வாடகை எவ்வளவு வருகிறது என்றால்மாதம் ரூ. 10,000 வருகிறது. ஐந்து சைட்டில் பழைய வீட்டினை வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான் அதில் எவ்வளவு வாடகை வருகிறது என்றால் மாதம் ரூ. 5 ஆயிரம் வருகிறது. மற்றொரு சைட்டில் குமரன் மெஸ் என்ற பெயரில் மெஸ் வாடகைக்கு விட்டுள்ளேன் என்றால் சரிதான் அதில் எவ்வளவு வாடகை வருகிறது என்றால் மாதம் 14,000 வாடகை வருகிறது. அய்யங்காடு தேசிய நெடுஞ்சாலையின் மெயின் ரோட்டில் அமைந்துள்ளது என்றால் சரிதான். செண்டின் விலை எவ்வளவுக்கு போகும் என்றால் ரூ 8 லட்சம் வரை போகும்.

4. ஐந்து சைட்டு மொத்தம் எவ்வளவு விஸ்தீரணம் கொண்டது என்றால் ஒரு ஏக்கரா 2 சென்ட் பூமியாகும். ஸ்ரீ பிளஸ் கல்யாண மண்டபம் அருகில் 90 சென்ட் பூமி உள்ளது என்றால் சரிதான் அதில் எனக்கு 45 சென்ட் பாத்தியட்டதாகும். மேற்படி பூமியும் பூர்வீக வகையில் பாத்தியப்பட்டது என்றால் சரிதான். கல்யாண மண்டபத்தில் கார் பார்க்கிங் வசதி இல்லாததால் என்னுடைய இடத்தை கார் பார்க்கிங் வசதிக்காக எடுத்துக் கொள்வார்களா என்றால் இல்லை. நான் காப்பார்க்கின் வசதிக்காக வாடகைக்கு விடுவேன் என்று வாடகை வருமானத்தை பெற்றுக் கொள்வேன் என்றால் சரியல்ல. பூர்வீக சொத்து கருமாண்டி செல்லிபாளையம் பேரூராட்சிக்கு உட்பட்டது என்றால் சரிதான். நானும், எனது அப்பாவும், பங்காளிகளும் கலார் செய்து கொண்டோம் என்றால் சரிதான். நான் விவசாயம் செய்து வருகிறேன் என்றால் சரிதான்.

5. ஞானிபாளையத்தில் 3 ஏக்கரா 40 செண்ட் பூமி உள்ளது என்றால் சரிதான். அதில் என்ன விவசாயம் செய்து வருகிறேன் என்றால் 90 தென்னை மரங்கள் உள்ளது 2 போர் வசதி உள்ளது. மேற்படி பூமியை நான் குத்தகைக்கு விட்டுள்ளேன். எங்கள் சமூகத்தை பொறுத்தவரையில் ஆண் வீட்டார் தான் தாலிக்கொடி வாங்கி கொடுப்பார்கள் என்றால் சரிதான். அதே அளவு பவுனை ஆண் வீட்டாரும் வாங்கி கொள்வார்கள். என்னுடைய சம்பந்தி வீட்டிலிருந்து 7 ½ பவுன் தாலிக்கொடி வாங்கி கொடுத்தார்கள் என்றால் சரிதான் அதன் எடையை நான் பார்க்கவில்லை. சம்பந்த வீட்டிலிருந்து 3 ½ பவுன் நெக்லஸ் வாங்கி கொடுத்தார்கள் என்றால் இல்லை. திருமணம் எங்கு நடந்தது என்றால் முகூர்த்தம் காஞ்சிகோவில் ஸ்ரீதேவி அம்மன் கோவிலில் நடந்தது மற்ற நிகழ்ச்சிகள் சித்தோடு VMT மகாலில் நடந்தது.

6. திருமண செலவுகளை இரு வீட்டாரும் செய்து கொண்டீர்கள் என்றால் சரிதான். திருமணத்துக்கு பின்னிட்டு என் மருமகன் என் வீட்டில் இருந்து வந்தார் என்றால் சரியல்ல அவ்வப்போது வந்து செல்வார். வீட்டோடு மாப்பிள்ளையாக என் வீட்டில் தான் இருந்தார் என்றால் சரியல்ல. 2015 ம் ஆண்டு என் சம்பந்திக்கு இருதய நோய் பிரச்சனைக்காக ராமகிருஷ்ணா மருத்துவமனையிலும் , குப்புசாமி மருத்துவமனையிலும் சிகிச்சை எடுத்துக் கொண்டார் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது. என் மகள் 1 ம் எதிர்மனுதாரரை பழிவாங்க வேண்டும் என்பதற்காக வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றும் அதற்கு ஆதரவாக நான் பொய் சாட்சி செல்கிறேன் என்றாலும் சரியல்ல. இந்த வழக்கில் யார் யாரை எதிர்மனுதாரர்களாக சேர்த்துள்ளார்கள் என்ற விவரம் எனக்கு தெரியும் தங்கமுத்து, சரஸ்வதி, மகேஸ்வரி ஆகியோர்களை சேர்த்துள்ளார்கள் மேற்படி நபர்களை இந்த வழக்கிலிருந்து நீக்கி விட்டார்கள் என்றால் எனக்கு அது பற்றி தெரியாது.

7. நான் பிரமாண பத்திரிக்கையில் ஐந்து பவுன் தங்க சங்கிலி, 2 பவுன் செயின் பிரேஸ்லெட் மோதிரமும் மற்றும் வீட்டு உபயோக பொருட்கள் வாங்கி கொடுத்ததாக சொல்லி உள்ளேன் அதை காட்டுவதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான் ஆனால் உண்மையில் அவைகளை செய்துள்ளோம். 1 ம் எதிர்மனுதாரருக்கு 6 லட்சம் பணம் கொடுத்ததாக சொல்லி உள்ளேன் எந்த தேதியில் எங்கு வைத்து கொடுத்தேன் என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால்

சரிதான். மேற்படி பணத்தை வங்கியிலிருந்து எடுத்துக் கொடுத்தேனா அல்லது வீட்டில் இருந்து எடுத்து கொடுத்தேனா என்ற விவரத்தை சொல்லவில்லை என்றால் சரிதான். கோவிலில் வைத்து கொடுத்தேன். ஆறு லட்சம் பணம் கொடுத்ததற்கு சாட்சிகள் எதையும் கொண்டு வந்து நிரூபிக்க தயாராக உள்ளேன் என்றால் சாட்சிகள் எதுவும் இல்லை. நான் 6 லட்சம் பணம் கொடுக்கவில்லை என்றால் வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

8. பிரமாண பத்திரத்தில் நான் எனது மகளை அடித்து துரத்தி விட்டதாக சொல்லி உள்ளேன் எந்த தேதியில் அடித்து துரத்தியதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். எனது மருமகன் தனி குடித்தனம் இருந்த பொழுது அங்கிருந்த பொருட்களை எடுத்து சென்று விட்டதாக சொல்லி உள்ளேன் எந்த தேதியில் பொருட்களை எடுத்துச் சென்றதாக தேதி குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். வரதட்சனை கேட்டதாக பிரமாண பத்திரத்தில் சொல்லி உள்ளேன் அதற்காக காவல் நிலையத்தில் புகார் எதுவும் அளித்தேனா என்றால் இல்லை இருவரும் சேர்ந்து வாழ வேண்டும் என்பதற்காக புகார் எதுவும் அளிக்கவில்லை. நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்று அவ்வாறு நடந்திருந்தால் காவல் நிலையத்தில் புகார் அளித்திருப்பேன் என்றால் சரியல்ல. மாப்பிள்ளையின் அக்கா மகளுக்கு பூப்பு நன்னீராட்டு விழாவுக்கு நானும் எனது இரண்டு மகள்களும் எனது மனைவியும் சென்றிருந்தோம் என்றால் சரிதான். விழா எங்கு நடந்தது என்றால் காஞ்சி கோவிலில் உள்ள மண்டபத்தில் நடந்தது எந்த மண்டபம் என்று நினைவில் இல்லை.

9. கல்யாண மண்டபத்தில் எனது மகளை எதிர் மனுதாரர்கள் அடித்ததாக சொல்லியுள்ளேன் அது சம்பந்தமாக காவல் நிலையத்தில் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். நான் சொன்னது போல் சம்பவம் எதுவும் நடக்கவில்லை என்றும் வழக்குக்காக பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. என்னுடைய பிரமாண பத்திரத்தில் கார் வாங்குவதற்கு 5 லட்சம் பணம் கேட்டதாக சொல்லி உள்ளேன் எந்த தேதியில் கேட்டார்கள் என்று சொல்லவில்லை என்றால் சரிதான் ஆனால் உண்மையில் கேட்டார்கள். எனது மகளுக்காக நான் பொய் சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

Signature of the Witness

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்லச் சொல்ல, என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் திறந்த நீதிமன்றத்தில் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சிக்கு படித்துக் காண்பிக்கப்பட்டு, சாட்சியால் சரி என்று ஒப்புக் கொள்ளப்பட்டு என் முன்னால் சாட்சியின் கையெழுத்து / கைரேகை பெறப்பட்டது.

நீதித்துறை நடுவர்,
பெருந்துறை